# யூலை – 09 – திங்கள்

**புனித வெரோனிக்கா யூலியானி**

**“நம்மை உயிர்வாழச் செய்தவர் அவரே. அவர் நம் கால்களை இடற விடவில்லை“– தி.பா 66:9**

## முதல் வாசகம் ஓசே 2 : 14 – 18, 21 – 22

ஆண்டவர் கூறுவது: ”ஆதலால் நான் இஸ்ரயேலை நயமாகக் கவர்ந்திழுப்பேன் பாலைநிலத்துக்கு அவளைக் கூட்டிப்போவேன் நெஞ்சுருக அவளுடன் பேசுவேன்.அவளுடைய திராட்சைத் தோட்டங்களை அவளுக்குத் திரும்பக்கொடுப்பேன் ஆகோர் பள்ளத்தாக்கை நம்பிக்கையின் வாயிலாக மாற்றுவேன் அப்போது அவள் அங்கே தன் இளமையின் நாள்களிலும், எகிப்து நாட்டினின்று வெளியேறிய காலத்திலும் பாடியதுபோல் பாடுவாள்.அந்நாளில், “என் கணவன்“ என என்னை அவள் அழைப்பாள் “என் பாகாலே“ என இனிமேல் என்னிடம் சொல்லமாட்டாள்” என்கிறார் ஆண்டவர்.அவளுடைய நாவினின்று பாகால்களின் பெயர்களை நீக்கிவிடுவேன் இனிமேல் அவர்களைப் பெயர் சொல்லி அழைக்கமாட்டாள்.அந்நாளில், காட்டு விலங்குகளோடும், வானத்துப்பறவைகளோடும், நிலத்தில் ஊர்வனவற்றோடும் அவர்களுக்காக நான் ஓர் உடன்படிக்கை செய்வேன் வில்லையும் வாளையும் போரையும் நாட்டினின்று அகற்றிவிடுவேன் அச்சமின்றி அவர்கள் படுத்திருக்கச் செய்வேன். மேலும் அந்நாளில் நான் மறுமொழி அளிப்பேன்” என்கிறார் ஆண்டவர். ”நான் வானத்தின் வழியாய் மறுமொழி அளிப்பேன் அது நிலத்தின் வழியாய் மறுமொழி தரும்.நிலம், கோதுமை, திராட்சை இரசம், எண்ணெய் வழியாய் மறுமொழி தரும். அவை இஸ்ரியேல்வழியாய் மறுமொழி தரும்” என்கிறார் ஆண்டவர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர்.

## நற்செய்தி : மத்தேயு9: 18 – 26

அக்காலத்தில் இயேசு தம்சீடர்களிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது, தொழுகைக்கூடத்தலைவர் ஒருவர் அவரிடம் வந்து பணிந்து, ”என்மகள் இப்பொழுதுதான் இறந்தாள். ஆயினும் நீர் வந்து அவள்மீது உம்கையை வையும். அவள் உடனே உயிர் பெறுவாள்” என்றார்.இயேசு எழுந்து அவர் பின்னேசென்றார். இயேசுவின் சீடர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர்.அப்பொழுது பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய ஒருபெண் அவருக்குப்பின்னால் வந்து அவரது மேலுடையின் ஓரத்தைத் தொட்டார். ஏனெனில் அப்பெண், ”நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும், நலம்பெறுவேன்” எனத்தமக்குள் சொல்லிக் கொண்டார். இயேசு அவரைத் திரும்பிப்பார்த்து, ”மகளே, துணிவோடிரு. உனது நம்பிக்கை உன்னைக்குணமாக்கிற்று” என்றார். அந்நேரத்திலிருந்தே அப்பெண் நலம் அடைந்திருந்தார். இயேசு அத்தலைவருடைய வீட்டிற்குச்சென்றார். அங்கே குழல் ஊதுவோரையும் கூட்டத்தினரின் அமளியையும் கண்டார். அவர், ”விலகிப்போங்கள் சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்” என்றார். அவர்களோ அவரைப்பார்த்து நகைத்தார்கள். அக்கூட்டத்தினரை வெளியேற்றியபின் அவர் உள்ளேசென்று சிறுமியின் கையைப்பிடித்தார் அவளும் உயிர்பெற்று எழுந்தாள்.இச்செய்தி அந்நாடெங்கும் பரவியது.

**தியானம்:** தொடுதல் பலவகைப்படும். ஒரு தாய் குழந்தையைத் தொட்டு அரவணைக்கும் போது தாயின் அன்பின் கதகதப்பை குழந்தை உணர்ந்து மகிழ்வதுண்டு. இன்றைய நற்செய்தியில்“என் மகள் இப்பொழுதுதான் இறந்தாள். ஆயினும் நீர் வந்து அவள் மீது உம் கையை வையும். அவள் உடனே உயிர்பெறுவாள்“ (மத்தேயு9:18) எனப்பணிவோடு கேட்கின்ற ஒருதகப்பனது தொடுகைக்கான வேண்டுதலையும் “நான் அவருடைய ஆடையை மாத்திரம் தொட்டாலே போதும் நலம்பெறுவேன் (மத்தேயு9:21) என்று நம்பிக்கையோடு தொடமுயலுகின்ற பெண்ணையும் நற்செய்தியாளர் எமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார். ஆண்டவர் இயேசு போதனை வாழ்வில் எத்தனையோ மனிதர்களது வாழ்வைத் தொட்டிருக்கின்றார். தொழுநோயாளர், பார்வையற்றோர் இபேச்சிழந்தோர், பசியுற்றோர், பேய்பிடித்தோர், விபச்சாரத்தில் வாழ்ந்தோர், அநியாயமாகப் பணம் சம்பாதித்தோர் எனப்பட்டியலிடலாம். இன்றைய நற்செய்திக்கமைவாக தொழுகைக் கூடத்தலைவன் ஆண்டவர் இயேசுவிடம் தனது மகளைத் தொடுமாறு கேட்கிறான். பன்னிரண்டு வருடங்களாக தீராத வியாதியால் பீடிக்கப்பட்டவளோ தான் தொடவேண்டுமென ஆசிக்கின்றாள். ஒருபெண் தனது ஆடையைத் தொட்டுக் குணமடைய ஆண்டவர் இயேசு அனுமதிப்பது அப்பெண்ணைத் தூண்டிய நம்பிக்கையும், துணிவுமென நாம் பொருள்கொள்ளலாமல்லவா? அந்தப்பெண்ணை தொட ஆண்டவர் இயேசு அனுமதித்தாரா? என்பதனை விடுத்து “அவரைத் திரும்பிப் பார்த்து மகளே துணிவோடிரு உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று என்றுகூறி அப்பெண்ணிற்கு அவனது சமூகத்திலிருந்த அவமானத்தையும் போக்குகின்றார். எமது தொடுதல்கள் அடுத்தவரை நலமடைய வைக்கவேண்டுமே தவிர துன்புறுத்துவதாக அல்லது சீரழிப்பதாக அமையக்கூடாது. எமது தொடுதல்கள் எவ்வாறு இருக்கின்றன? கையால் மட்டுமல்ல நாம் மனதாலும் அடுத்தவரை அன்போடு தொடவேண்டும். மாறாக வன்முறையோடு தொடக்கூடாது. ஒவ்வொரு முறையும் நாம் பிறரை கையாலோ அல்லது மனதாலோ தொடும்போது அது ஆண்டவர் இயேசுவின் அரவணைக்கும் தொடுகையாக இருக்கவேண்டுமென வரம் வேண்டுவோம்.